நேபாள பேரிடர்: தருமையாதீனத்தில் கூட்டுப்பிரார்த்தனை

மயிலாடுதுறை, ஆக. 27: நேபாளம் பேரிடரில் சிக்கியவர்கள் நலமுடன் திரும்பவும், உயிரிழந்தவர்களின் ஆன்மா சாந்தியடையவும், அந்நாட்டில் இயல்புநிலை திரும்பவும் வேண்டி மயிலாடுதுறை தருமபுரம் ஆதீனத்திருமடத்தில் வியாழக்கிழமை கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றது.

ஸ்ரீசொக்கநாதர் பூஜை மடத்தில் நடைபெற்ற நிகழ்வில் தருமபுரம் ஆதீனம் 27-ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீமாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பங்கேற்று, தீபம் ஏற்றி, சிறப்பு வழிபாடு மேற்கொண்டார். இதில், தருமபுரம் தேவார பாடசாலை மாணவர்கள், திருஞானசம்பந்தரின் கோளறு பதிகம், நெடுங்குளம் இடர்களையும் பதிகம் ஆகியவற்றை பாடி திருமுறை விண்ணப்பம் செய்தனர்.

தொடர்ந்து அனைவரும் இரண்டு நிமிடம் மௌனம் அனுசரித்தனர். இதில், தருமபுரம் ஆதீனக் கட்டளை தம்பிரான் சுவாமிகள், தருமபுரம் ஆதீன பொது மேலாளர் அரவிந்தன், தருமபுரம் ஆதீனக் கல்லூரிச் செயலர் இரா. செல்வநாயகம், கல்லூரி முதல்வர் சி. சுவாமிநாதன், ரோட்டரி நிர்வாகி வி.ராமன், தொழிலதிபர் எஸ்.வி.பாண்டுரெங்கன், நேபாளில் சிக்கியுள்ள ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி வி.சிவஞானத்தின் மைத்துனர் செந்தில்ராஜன் உள்ளிட்டோர் பங்கேற்று பிரார்த்தனை செய்தனர்.

'நேபாளத்தில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்க போர்க்கால நடவடிக்கை தேவை'

நாகப்பட்டினம், ஆக. 27: நேபாளத்தில் வெள்ளத்தில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனித நேய மக்கள் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து, அக்கட்சியின் தலைவரும், சட்டப்பேரவை உறுப்பினருமான எம்.எச். ஜவாஹிருல்லா வெளியிட்டுள்ள அறிக்கை: நேபாள வெள்ளத்தில் சிக்கியுள்ளவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் எந்தவித தாமதமும் ஏற்படக் கூடாது. இந்திய அரசு, குறிப்பாக பிரதமர் அலுவலகம் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சகம் நேபாள அரசுடன் ஒருங்கிணைந்து மீட்புப் பணிகளை போர்க்கால அடிப்படையில் உடனடியாக முடுக்கிவிட வேண்டும். சிக்கியுள்ள இந்தியர்கள் மட்டுமின்றி, வெளிநாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட அனைத்து மக்களையும் பாதுகாப்பாக மீட்பதற்குத் தேவையான விமானங்கள், ஹெலிகாப்டர்கள், மீட்புக் குழுக்கள் மற்றும் மருத்துவ உதவிகளை ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேலும், தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் அங்கு சிக்கியுள்ளனர், அவர்கள் எந்தெந்த இடங்களில் உள்ளனர், அவர்களின் தற்போதைய நிலை என்ன என்பது குறித்த துல்லியமான தகவல்களை தமிழக அரசுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும். மீட்புப் பணிகள் நிறைவடையும் வரை மத்திய அரசு நிலைமையைத் தொடர்ந்து கண்காணித்து, தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என அதில் வலியுறுத்தியுள்ளார்.

மின்சாரம் பாய்ந்து பெயிண்டர் உயிரிழப்பு

மன்னார்குடி, ஆக. 27: மன்னார்குடி அருகே வீட்டில் வண்ணம் அடித்துக்கொண்டிருந்தபோது மின்சாரம் பாய்ந்து பெயிண்டர் வியாழக்கிழமை உயிரிழந்தார்.

ராஜேஷ்

புத்தகரம் பகுதியைச் சேர்ந்த ராயப்பன் மகன் ராஜேஷ் (50). பெயிண்டரான இவர், சித்தமல்லியில் உள்ள வீடு ஒன்றில் வண்ணம் அடித்துக் கொண்டிருந்தார். அப்போது, வீட்டில் இருந்த மின்விளக்கை அவர் சரி செய்தபோது, எதிர்பாராத விதமாக ராஜேஷ் மீது மின்சாரம் பாய்ந்ததில் அவர் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார். இதுகுறித்து, பெருகவாழ்ந்தான் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். ராஜேஷ் சடலம், உடற்கூறாய்வுக்காக மன்னார்குடியில் உள்ள அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

குறுவை இழப்பு: வறட்சி நிவாரணம் வழங்க வலியுறுத்தல்

திருவாரூர், ஆக. 27: குறுவை சாகுபடி இழப்பு ஏற்பட்டுள்ளதால், டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்து, நிவாரணம் வழங்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் வ. மோகனச்சந்திரன் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது. கூட்டம் தொடங்கியவுடன், விவசாயிகள் சிலர் எழுந்து, டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி செய்யப்படாமல் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்திருப்பதால் வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும்; பயிர்க்கடனை முழுவதும் தள்ளுபடி செய்யவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.

தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

பேரளம் வி. பாலகுமாரன்: திருவாரூர் மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறையில் விவசாயிகள் மானியத்தில் பெறும் வேளாண் கருவிகளுக்கு குறிப்பிட்ட தேதிவரை முன்பதிவும், அதில் குலுக்கல் முறையில் விவசாயிகளை தேர்வு செய்து வழங்குவதாகவும், குலுக்கலில் இடம் பெறாதவர்கள் மீண்டும் ஆன்லைனில் பதிவு செய்ய வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. இது ஏற்புடையதல்ல. எனவே, பழைய முறைப்படி முன்னுரிமை அடிப்படையில் வழங்கவேண்டும்.

திருவாரூரில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பேசுகிறார் மாவட்ட ஆட்சியர் வ. மோகனச்சந்திரன்.

நன்னிலம் ஜி. சேதுராமன்: மேட்டூர் அணையில் தற்போது தண்ணீர் திறப்பது பலனளிக்காது. 15 நாள்களுக்குப் பிறகு தண்ணீர் திறப்பது விவசாயப் பணிகளுக்கு உதவியாக இருக்கும். தண்ணீர் திறப்பதற்கு ஏற்ப தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். ஆழ்துளை கிணறு மூலம் சாகுபடி செய்தவர்களும் பாதிக்குள்ளாகியிருப்பதால், டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்து, ஏக்கருக்கு ரூ. 25,000 நிவாரணம் வழங்க வேண்டும்.

கொரடாச்சேரி தம்புசாமி: தண்ணீர் திறப்பது வரவேற்கத்தக்கது. மா, வாழை, கால்நடைகளுக்கு மிகுந்த பயனாக இருக்கும். குறைந்த அளவு தண்ணீர் தேவைப்படும் விதைநெல்லை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு பதிலளித்து ஆட்சியர் தெரிவித்தது: திருவாரூர் மாவட்டத்தில், குறுவை பருவத்தில் நெல் பயிரானது 60,870 ஹெக்டேர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 7,125.558 ஹெக்டேர் பொது, 24,423 ஹெக்டேர் திருந்திய நெல் சாகுபடியிலும், நேரடி நெல் விதைப்பு 14,790 ஹெக்டேர் என மொத்தம் 46,338 ஹெக்டேர் குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

மேலும், மாவட்டத்தில் 1146.6 மெட்ரிக் டன் நெல் விதைகள் இருப்பு உள்ளன. குறுவை பருவத்தில் 264 மெட்ரிக் டன் விதைகள் வேளாண் விரிவாக்க மையம் மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் விவசாயிகளின் பயிர் சாகுபடிக்குத் தேவையான உரம் இருப்பு உள்ளது என்றார்.

கூட்டத்தில், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் சிவசுப்ரமணியன், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் சித்ரா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஜெயசீலன், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் வித்யா, செயற்பொறியாளர் (வெண்ணாறு வடிநிலக் கோட்டம்) இளங்கோவன், செயற்பொறியாளர் (வெண்ணாறு வடிநிலக் கோட்டம் தஞ்சாவூர்) ஆனந்தன் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

கோட்டூர், தரங்கம்பாடியில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் சோதனை

மன்னார்குடி, ஆக. 27: திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அருகேயுள்ள கோட்டூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு போலீஸார் திடீர் சோதனையில் வியாழக்கிழமை ஈடுபட்டனர்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் ஊழல் தடுப்பு கண்காணிப்பு போலீஸார் திடீர் சோதனையில் ஈடுபட்டனர். அதன் ஒரு பகுதியாக, திருவாரூர் மாவட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர் நந்தகோபால் தலைமையில் 10-க்கும் மேற்பட்ட போலீஸார், கோட்டூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு வந்தனர். அவர்கள் நுழைவு வாயிலை பூட்டிவிட்டு சோதனையில் ஈடுபட்டனர்.

வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களையும் ஒரே இடத்தில் வைத்து தீவிர விசாரணை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது. இரவு 8.30 மணிவரை சோதனை நடைபெற்றது. இதற்கிடையில், அலுவலகத்திலிருந்து ஒருசிலர் மட்டும் வெளியே அனுப்பிவைக்கப்பட்டனர். அலுவலகத்திற்குள் யாரையும் அனுமதிக்கவில்லை.

இந்த சோதனையில், ஊராட்சி செயலர் ஒருவர் மற்றும் இரண்டு ஊழியர்களிடம் கணக்கில் வராத ரூ.15,000 பறிமுதல் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

தரங்கம்பாடி: தரங்கம்பாடி சார்-பதிவாளர் அலுவலகத்தில் மயிலாடுதுறை லஞ்ச ஒழிப்புத் துறை ஆய்வாளர் அருண் பிரியா தலைமையில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் சோதனை மேற்கொண்டனர். அப்போது கணக்கில் வராத ரூ.49,445 பறிமுதல் செய்து சார் பதிவாளர் மகேஸ்வரியிடம் விசாரணை மேற்கொண்டனர்.

வடுவூரில் மாநில ஆடவர் கபடிப் போட்டி இன்று தொடக்கம்

மன்னார்குடி, ஆக. 27: மன்னார்குடி அருகேயுள்ள வடுவூரில், மாநில அளவிலான ஆடவர் கபடிப் போட்டி வெள்ளிக்கிழமை (ஆக.28) தொடங்குகிறது.

வடுவூர் பாசப்பறவைகள் கபடி கழகம் சார்பில் மாநில அளவிலான 27-ஆம் ஆண்டு ஆடவர் கபடிப்போட்டி வெள்ளிக்கிழமை இரவு தொடங்கி சனிக்கிழமை இரவு வரை இரண்டு நாள்கள் இரவு, பகல் தொடர் ஆட்டமாக நடைபெறுகிறது. வடுவூர் மின்வாரிய அலுவலக சாலையில் உள்ள பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் இப்போட்டியில், மாநில அளவில் முன்னணி கபடி அணிகள் பங்கேற்று மோதுகின்றன. முதல் பரிசு ரூ. 1 லட்சம், இரண்டாம் பரிசு ரூ.75,000, மூன்று மற்றும் நான்காம் பரிசு தலா ரூ. 50,000 மற்றும் அனைத்து பரிசுகளுடன் சுழற்கோப்பையும் வழங்கப்படும் என மாவட்ட அமைச்சூர் கபடி கழகச் செயலர் ராச.ராசேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆவணி அவிட்டம்

நீடாமங்கலம், ஆக. 27: நீடாமங்கலம் பகுதியில் ஆவணி அவிட்ட விழா வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது.

விஸ்வகர்மா சமூகத்தினர் புனித நீராடி புத்தாடை அணிந்து, நீடாமங்கலம் மேலராஜவீதி விநாயகர் கோயிலில் புதிய பூணூல் அணிந்து கொண்டனர். குல தெய்வ வழிபாடும் நடைபெற்றது.

இதேபோல் பல்வேறு சமூகத்தினரும் ஆங்காங்கே ஆற்றங்கரைகளில் நீராடி, புத்தாடை அணிந்து, கோயில்களில் புதிய பூணூல் அணிந்து கொண்டனர்.

டிராக்டர் உரிமையாளர்கள் ஆர்ப்பாட்டம்

வேதாரண்யம், ஆக. 27: வேதாரண்யத்தில் தனியார் நிலத்தில் மண்ணை வெட்டி நில சீரமைப்புப் பணிக்குக்கூட அனுமதி மறுக்கப்படுவதாகக் கூறி டிராக்டர் மற்றும் ஜேசிபி இயந்திர உரிமையாளர்கள், விவசாய சங்கத்தினர் வியாழக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வேதாரண்யம் வட்டாட்சியர் அலுவலகம் எதிரே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டார விவசாயிகள் சங்கச் செயலாளர் ஒளிச்சந்திரன் தலைமை வகித்தார். வட்டாரத் தலைவர் ராஜன், தமிழக விவசாய சங்க கொள்கைப் பரப்புச் செயலாளர் தமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விவசாயிகளுக்கு சொந்தமான பட்டா நிலத்தில் கூட மண் வெட்டி எடுக்க அனுமதிக்கப்படாததால் டிராக்டர் மற்றும் ஜேசிபி இயந்திரங்களை வைத்திருப்போர் வேலை வாய்ப்பு இல்லாமல் பாதிக்கப்படுவதாக கூறி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

புதிய ஆலயம் திறப்பு விழா

தரங்கம்பாடி, ஆக. 27: தரங்கம்பாடி அருகேயுள்ள எருக்கட்டாஞ்சேரி மெஞ்ஞானபுரத்தில் நேசர் இயேசு ஆலயம் (பீபிசிஐ) திறப்பு விழா புதன்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு தலைமை போதகர் டேவிட் சந்தோஷம் தலைமை வகித்தார். சுவிசேஷகர் ஜான்லீபன் மற்றும் போதகர் ஜான் கிறிஸ்டோபர் ஆகியோர் புதிய ஆலயத்தை திறந்து வைத்தனர். தொடர்ந்து சிறப்பு ஆராதனை நடைபெற்றது. இதில், நாகர்கோவில் சுவிசேஷகர் ஜான்லீபன் மற்றும் அனைத்து சபை தலைவர்கள், போதகர்கள், கிறிஸ்துவ நல்லெண்ண இயக்க மாவட்ட பொறுப்பாளர்கள் பங்கேற்றனர். போதகர் சுந்தர் எபினேசர் நன்றி கூறினார்.

தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

திருமருகல், ஆக. 27: கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகள் பெற்ற பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்ய கோரி திட்டச்சேரி அருகே நடுக்கடை கடை தெருவில் வியாழக்கிழமை விவசாயிகள் துண்டை விரித்து பிச்சையெடுக்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் சார்பில் திட்டச்சேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் முன் மாவட்ட தலைவர் விஜயராஜ் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், மாவட்ட செயலாளர் சக்திவேல், மாவட்ட பொருளாளர் காளிதாஸ் முன்னிலை வகித்தனர். மாநில கொள்கை பரப்பு செயலாளர் தமிழ்ச்செல்வன் கோரிக்கைகளை விளக்கி பேசினார். தமிழக அரசு தேர்தல் வாக்குறுதிபடி விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களில் பெற்றுள்ள பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என கோஷங்களை எழுப்பினர்.

தொடர்ந்து தமிழக அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், விவசாயிகள் தங்களது துண்டுகளை விரித்து சாலையில் நடந்து செல்லும் பொதுமக்களிடம் பிச்சை கேட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். திட்டச்சேரி கிளை தலைவர் இளஞ்செழியன் நன்றி கூறினார்.

HDB FINANCIAL SERVICES

HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்.

பதிவு அலுவலகம் : ராதிகா, 2ஆவது தளம், லா கார்டன் சாலை, நவ்ரங்புரா, அகமதாபாத் - 09. மண்டல அலுவலகம்: தரை தளம், ஜெனித் ஹவுஸ், கேசவ்ராவ் காத்யே மார்க், ரேஸ் கோர்ஸ் எதிரில், மகாலட்சுமி, மும்பை- 34. தொலைபேசி: 022-39586300.

அதிகாரபூர்வ அலுவலர்: M/s.HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்.,
எண்.36/71, முதல் தளம், சுந்தர் டவர்ஸ், சாலை ரோடு, உறையூர், திருச்சி, தமிழ்நாடு-620 003

ஏல விற்பனை அறிவிப்பு டெண்டருடன் E-ஏலம்

(கடன்தாரர் / கூட்டு விண்ணப்பதாரர்/ பொதுமக்களுக்கு) SARFAESI சட்டம்-2002, விதி 8(6) R/w விதி 9(1)-ன் கீழ்

கீழே கையொப்பமிட்டுள்ளவரான **HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்** -ன் அதிகாரபூர்வ அலுவலர் அவர்கள், இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் கணக்கில் கடனுக்கு ஈடாக உள்ள சொத்துகளை **'உள்ள இடத்தில் உள்ளவாறு' & 'உள்ளது உள்ளவாறு'** எனும் அடிப்படையில் விற்கும் உரிமையுடன் 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் தமது சுவாதீனத்தில் (Possession) எடுத்துக்கொண்டார்.

விண்ணப்பதாரர் & கூட்டு விண்ணப்பதாரர் பெயர் & முகவரி: 1. சிவசக்தி பழைய அயர்ன் ஸ்கிராப், சிவசக்தி பழைய அயர்ன் ஸ்கிராப் 18/7 வேதை சாலை, திருத்துறைப்பூண்டி, திருத்துறைப்பூண்டி, திருவாரூர் HO-610001 தமிழ்நாடு, மற்றும் **மேலும்** ச.எண்.247/1B, புதிய 1/3, பழைய ரொக்ககுத்தகை குடியானவர் தெரு, பிளாக் எண்.26 திருவாரூர் HO-610001, **2.சித்ரா சபாபதி,** 30 ரொக்ககுத்தகை குடியானவர் தெரு, திருத்துறைப்பூண்டி BSNL டவர் பின்புறம், திருவாரூர், திருவாரூர் HO-610001, தமிழ்நாடு, **3. சபாபதி கலிதீர்த்தர்,** 38 ரொக்ககுத்தகை குடியானவர் தெரு, திருத்துறைப்பூண்டி BSNL டவர் பின்புறம், திருவாரூர், திருவாரூர் HO-610001, தமிழ்நாடு. **2. கடன் கணக்கு எண்::4434029, 3. மொத்த நிலுவைத் தொகை: கடன் கணக்கு எண்::4434029-க்கு ரூ.66,68,503.05 (ரூபாய் அறுபத்தாறு லட்சத்து அறுபத்து எட்டாயிரத்து ஐநூற்று மூன்று மற்றும் ஐந்து பைசா மட்டும்) 30 ஜூலை 2026** அன்றுள்ளபடி, மற்றும் அது முழுமையாகச் செலுத்தப்படும் வரை கணக்கிடப்படும் வட்டி/ தற்செயலான செலவுகளுடன். **கடன் வழங்கிய நிறுவனத்திற்கு தெரிந்தவரையில் வில்லங்கம்-NIL**

அசையாச் சொத்துக்களின் விவரங்கள்: சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், அமைவிடம் நாகப்பட்டினம் பதிவு மாவட்டம், திருத்துறைப்பூண்டி துணைப் பதிவு, திருத்துறைப்பூண்டி தாலுகா & கிராமம், திருத்துறைப்பூண்டி நகராட்சி, ரொக்ககுத்தகை குடியான தெரு, நகராட்சி வார்டு எண்.C பிளாக் எண்.26, TS.NO 1/3, S.no.247/1B, 3654 சதுர அடி பரப்பளவு, **எல்லைகள் :வடக்கு:** 16 அடி பாதை, **தெற்கு:** ஆரோக்கியமேரி நஞ்சை, **கிழக்கு:** சுப்பிரமணியன் சொத்து, **மேற்கு:** சாய்நகர் மனை

ரிசர்வ் விலை	EMD தொகை	உயர்த்தும் ஏல தொகை	ஏல தேதி மற்றும் நேரம்	EMD செலுத்த கடைசி தேதி & நேரம்
ரூ.73,31,320/-	ரூ.7,33,132/-	ரூ.1,00,000/-	29.09.2026, முற்பகல் 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை எண்ணிக்கை வரம்பற்ற 5 நிமிடங்கள் நீட்டிப்புடன்	28.09.2026 அன்று மாலை 05.00 மணி வரை

ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏல விற்பனையின் விதிகள் மற்றும் நிபந்தனைகள்

1. ஏல விற்பனையானது **'இணைய வழி e-ஏல'** முறையில் **https://bankeauctions.com** இணையத்தளத்தில் மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நாள்களில் எண்ணிக்கை வரம்பற்ற 5 நிமிடக் கால நீட்டிப்பு வசதியுடன் நடைபெறும். **2.**ஆர்வமுள்ள ஏலதாரர்கள் **https://bankeauctions.com** இணையத் தளத்தில் தங்கள் பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் பயன்படுத்தி டேவணித்தொகையைச் செலுத்தலாம் **https://bankeauctions.com** இணையத்தளத்தில் தங்கள் பெயரைப் பதிவு செய்து பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் இலவசமாகப் பெறலாம்). டேவணித்தொகையைக் குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% எனும் அளவில் **"HDB Financial Service Limited"** எனும் பெயரிலான செலுத்தாணை (Order) / கேட்பு வரைவோலை (DD) வடிவில் செலுத்த வேண்டும். இணையத் தளத்தில் தன்னைப் பதிவு (ஒருமுறை) செய்து கொண்ட பின்பு ஆர்வமுள்ள ஏலதாரர் / வாங்குநர் ஏல ஆவணத்தைத் தாக்கல் செய்தவற்கான கடைசி நாளுக்கும் நேரத்துக்கும் முன்னதாகப் பின்வரும் ஆவண நகல்களை இணையத் தளத்தில் பதிவேற்ற வேண்டும். அவையாவன: i) NEFT/RTGS செலுத்துச்சீட்டு நகல் அல்லது கேட்பு வரைவோலை, ii) நிரந்தரக் கணக்கு எண் (PAN) அட்டை நகல், iii) அடையாளச் சான்று / முகவரிச் சான்று [வாடிக்கையாளர் விவர ஆவணங்கள் (KYC) எனும் வகையில்] அஃதாவது சுயசான்றொப்பம் செய்யப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை நகல் / ஓட்டுநர் உரிம நகல் / கடவுச்சீட்டு நகல். இவை இல்லாமல் வரும் ஏலப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும். இவை தவிர, பின்னிணைப்பு-II & III ஆகியவற்றின் (இவற்றை **https://bankeauctions.com** இணையத் தளத்தில் தரவிறக்கிக் கொள்ளலாம்) ஒளிவருடல் நகல்களை (scanned copies) முறையாக நிரப்பிக் கையொப்பமிட்டுப் பதிவேற்றுவதும்கூட அவசியமாகும். பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் உருவாக்குதல், தரவுகளைப் பதிவேற்றுதல், ஏலப்புள்ளி ஆவணங்களைத் தாக்கல் செய்தல் போன்றவற்றுக்கு உதவி தேவைப்படுகிற மற்றும் இணைய வழி உள் ஏலக்கோரலுக்கான பயிற்சி / செய்முறை விளக்கம் தேவைப்படுகிற ஆர்வமுள்ள ஏலதாரர்கள் தொடர்பு கொள்க: **C1 INDIA PRIVATE LIMITED, ப்ளாட் எண். 68, 3 வது தளம், செக்டார் - 44, குர்கான், ஹரியாணா - 122 003 மின்னஞ்சல் - support@bankeauctions.com, தொடர்பு நபர் பெயர்/ மின்னஞ்சல் முகவரி/ தொடர்பு எண்: 1.தரணி கிருஷ்ணா / andhra@c1india.com / தொலைப்பேசி:9948182222, 3.**ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஏலத்துக்கு நேரிடையாக வந்து தாங்களே தனிப்பட்ட முறையில் கலந்து கொள்வதோடு தாங்கள் தங்களுக்காகத்தான் ஏலத்தில் கலந்து கொள்வதாக எழுத்துப்பூர்வமாக பிரகடன அறிக்கை (declaration) தர வேண்டும். தன்/ அவர் சார்பாக அதிகாரப்பூர்வ நபரை அனுப்பி வைப்பது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. **4.**ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஒப்பந்தப்புள்ளிப் படிவத்தைப் பெற அணுக வேண்டியவர்: மேலாளர் : **M/s. HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்., 36/71, சுந்தர் டவர்ஸ், சாலை ரோடு, உறையூர், திருச்சி -620003, தமிழ்நாடு**. **5.** ஆர்வமுள்ள ஏலதாரர்கள் இங்கே அறிவிக்கப்பட்டுள்ள இந்த ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏல விற்பனையில் கலந்து கொள்ள பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் படிவத்தை மட்டும் நிரப்பி உறையிலிட்டு மூடி முத்திரையிடடு **அதிகாரப்பூர்வ அலுவலர், HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்** என முகவரியிட்டு குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% அளவுள்ள டேவணித்தொகையை **"HDB Financial Service Limited"** என்ற பெயரில் எடுக்கப்பட்ட செலுத்து ஆணை (PO) / கேட்பு வரைவோலை (DD) இணைத்து **28.09.2026 அன்று மாலை 05.00 மணிக்கோ** அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்க வேண்டும். **6.** சொத்து ஆய்வு மற்றும் இதர விவரங்களுக்கு ஆர்வமுள்ள ஏலதாரர் தொடர்பு கொள்ள வேண்டியவர்கள்: **M/s. HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்., 36/71, சுந்தர் டவர்ஸ், சாலை ரோடு, உறையூர், திருச்சி -620003 , அதிகாரப்பூர்வ அலுவலர்: J.கவிப்ரியா - 7904382718, திரு.ரஞ்சித் -9952535434. 7.** சொத்தானது **"உள்ளது உள்ள இடத்தில் மற்றும் உள்ளது உள்ளபடி"** எனும் நிபந்தனைகள் அடிப்படையில் விற்பனை செய்யப்படும். **8.** இங்கே அறிவிக்கப்பட்டுள்ள இந்த ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏல விற்பனைக்கான, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஆர்வமுள்ள ஏலதாரர்கள் முன்னிலையில் **29.09.2026 அன்று முற்பகல் 11:00 மணிக்குத்** திறக்கப்படும். பொதுவாக ஏலமானது மூடியுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மூலமாக நடைபெறும் என்றாலும்கூட, மூடியுள்ள ஒப்பந்தப்புள்ளி நடைமுறையின் மூலம் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் தொகையை விடக் கூடுதலாக ஏலம் கோர விரும்பும் ஆர்வமுள்ள ஏலதாரர்களுக்கிடையே அதிகாரப்பூர்வ அலுவலர் தனது விருப்புரிமையின் பேரில் வெளிப்படையான ஏலத்தை நடத்தக்கூடும். அப்படி நடந்தால் அந்த நேரத்தில் உச்சபட்சத் தொகைக்கு ஏலம் கோருபவருக்கே விற்பனை முடிவு செய்யப்பெறும். எப்படி இருந்தாலும் விற்பனையானது **HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெடின்** உறுதிப்படுத்துதலுக்கு உட்பட்டது. **9.** வெற்றி பெறும் ஏலதாரர் விற்பனைத் தொகையில் 25%-ஐ (டேவணித்தொகை உட்பட) விற்பனை முடிந்த உடன் அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு முன்னதாகச் செலுத்த வேண்டும். மீதமுள்ள 75% தொகை விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட நாளிலிருந்து 15 நாள்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். தவறினால் முதலில் செலுத்தப்பட்ட 25% தொகை பறிமுதல் செய்யப்படும். எக்காரணத்தைக் கொண்டும் இது திருப்பித் தரப்படமாட்டாது. ஒருவேளை வெற்றி பெற்ற ஏலதாரர் மேலே குறிப்பிட்டபடி மொத்த விற்பனைத் தொகையின் 25%-ஐச் செலுத்தத் தவறினால், அவருக்கு அடுத்த நிலையில் இருப்பவர் பரிசீலிக்கப்பட்டு அவருக்கு விற்பனையை உறுதி செய்ய முடிவெடுக்கப்படும். **10.** இங்கே குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள் விற்பனை விலை முழுமையாகப் பெறப்பட்ட பின்னரே விற்பனைச் சான்றிதழானது வெற்றி பெற்ற வாங்குநரின் பெயரில் அதிகாரப்பூர்வ அலுவலரால் வழங்கப்படும். **11.** பெயர் மாற்றத்துக்காகச் சட்டப்படி செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வை, பதிவுக் கட்டணம் முதலான கட்டணங்கள் வெற்றி பெறும் வாங்குநரையே சாரும். **12.** சட்டப்படி செலுத்த வேண்டிய நிலுவைகளான (சட்டப்படியான வீட்டு வரி, மின்சாரக் கட்டணங்கள் மற்றும் இதர நிலுவைகள்) வருமான வரி பிடித்தம் (TDS), சரக்கு மற்றும் சேவை வரி (GST) ஏதேனும் அரசுக்கு, அரசின் கீழான அமைப்புகளுக்கு, உள்ளாட்சி அமைப்புகளுக்குச் செலுத்த வேண்டியிருந்தால் அவற்றை வெற்றி பெற்ற ஏலதாரரே செலுத்த வேண்டும். **13.** எந்தக் காரணமும் சொல்லாமல், ஏலப்புள்ளியையோ ஒப்பந்தப்புள்ளியையோ எந்த ஒரு விலைகோரலையுமோ அனைத்து விலைகோரல்களையுமோ ஏற்க அல்லது தள்ளுபடி செய்ய அல்லது ஏலத்தைத் தள்ளி வைக்க / ஒத்தி வைக்க / ரத்துச் செய்யவும் , எந்தக் காரணமும் சொல்லாமல் விற்பனையின் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் மாற்றவும் அதிகாரப்பூர்வ அலுவலருக்கு முழு உரிமை உண்டு.

தேதி : 26.08.2026, இடம் : திருச்சி **ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், M/s. HDB ஃபைனான்சியல் சர்வீஸஸ் லிமிடெட்**

இருப்புப் பாதை வழியே வேளாங்கண்ணி பக்தர்கள் பாதயாத்திரை

நீடாமங்கலம், ஆக. 27: வேளாங்கண்ணி மாதா பேராலய ஆண்டுத் திருவிழாவிற்கு பாதயாத்திரையாக வரும் பக்தர்களில் சிலர் ஆபத்தை உணராமல் ரயில்வே இருப்புப் பாதையில் நடந்துவருவது கவலை அளிப்பதாக சக பக்தர்கள் தெரிவிக்கின்றனர்.

நாகைமாவட்டம், வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய மாதா பேராலய ஆண்டுத் திருவிழாவில் பல்வேறு பகுதிகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பாதயாத்திரையாக வந்து வழிபடுவது வழக்கம். நிகழாண்டுக்கான திருவிழா சனிக்கிழமை (ஆக. 29) தொடங்கி, செப்டம்பர் 8-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் தமிழகம் மட்டுமின்றி பல்வேறு மாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பர். இதனால், பல்வேறு வாகனங்களில் வரும் பக்தர்கள்; பாதயாத்திரையாக வரும் பக்தர்கள் என வேளாங்கண்ணி களைகட்டிவருகிறது.

விபத்து அபாயம்



நீடாமங்கலம் பகுதி ரயில் தண்டவாளத்தில் நடந்துவரும் பக்தர்கள்.

இந்நிலையில், கன்னியாகுமரி, நாகர்கோவில், திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை, திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து வேளாங்கண்ணிக்கு பாதயாத்திரை மேற்கொண்டுள்ள பக்தர்களில் ஒரு பகுதியினர், ரயில்வே இருப்புப்பாதை வழியாக செல்கின்றனர்.

இந்த பகுதிகளில் உள்ள ரயில் பாதையில் விரைவு ரயில்கள், பயணிகள் ரயில்கள், சரக்கு ரயில்கள் என நாள்தோறும் அதிக எண்ணிக்கையில் ரயில்கள் இயக்கப்படுகின்றன. இதனால், சராசரியாக அரை மணி நேரத்திற்கு ஏதாவது ஒரு ரயில் இந்த பாதையில் செல்லும். இதை உணராமல் ரயில்வே இருப்புப் பாதையில் பக்தர்கள் நடந்து வருவதால், விபத்து நேரிடும் அபாயம் உள்ளது என சாலை வழியே வரும் சக பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு ரயில்வே இருப்புப் பாதையில் பக்தர்கள் வருவதை தடுக்க சம்பந்தப்பட்ட துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்திய கம்யூ. ஒன்றியக் குழு கூட்டம்

நீடாமங்கலம், ஆக. 27: இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வலங்கைமான் ஒன்றியக் குழு மற்றும் கிளை செயலாளர்கள் கூட்டம் ஆலங்குடியில் புதன்கிழமை நடைபெற்றது.

விவசாயத் தொழிலாளர் சங்க ஒன்றியப் பொருளாளர் ஏ. மருதையன் தலைமை வகித்தார். கட்சியின் ஒன்றியச் செயலாளர் எஸ்.எம். செந்தில்குமார், மாவட்ட விவசாயத் தொழிலாளர் சங்க செயலாளர் கு. ராஜா மற்றும் ஒன்றிய துணைச் செயலாளர்கள், கிளை செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவித்து, நிவாரணமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 15,000 வழங்க வேண்டும். விவசாயத் தொழிலாளர் குடும்பத்திற்கு நிவாரணமாக தலா ரூ.10,000 வழங்க வேண்டும்.

விவசாய கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வங்கி ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

திருவாரூர், ஆக. 27: திருவாரூரில் வங்கி ஊழியர் கூட்டமைப்பு சார்பில் ஆர்ப்பாட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

வங்கிகளில் வாரம் 5 நாள் வேலையை உடனடியாக அமல்படுத்த வேண்டும்; உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகையை ஒப்பந்தப்படி ஊழியர்களுக்கு வழங்க வேண்டும்; வங்கி ஊழியர் ஊதிய ஒப்பந்தம் குறித்து பேச ஊழியர் சங்கங்களை அழைக்க வேண்டும்; நீண்டகாலமாக நிலுவையில் உள்ள கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பாரத ஸ்டேட் வங்கி முன் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு, வங்கி ஊழியர் சங்க கூட்டமைப்பின் தலைவர் என். காளிமுத்து தலைமை வகித்தார். சங்க நிர்வாகிகள் தர்மதாஸ், சாந்தகுமார், ராமலிங்கம், விஜயகுமார், வரதராஜன் உள்ளிட்ட பலர் பங்கேற்று, கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கமிட்டனர்.